# கைத்தொழில் செயற்பாடு டிசம்பரில் அதிகரிப்பு

இலங்கையின் கைத்தொழில் செயற்பாடானது 2018 டிசம்பர் மாதத்தில் 1.6 வீதமாக அதிகரித்துள்ளது. விடுமுறை காலத்தில் உணவு உற்பத்தித் துறையில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஒட்டுமொத்த கைத்தொழில் துறையும் வளர்ச்சி கண்டிருப்பதாக குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

குடிசன மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலேயே இது பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டு 107.7 ஆகக் காணப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டியானது 2018ஆம் ஆண்டு டிசம்பரில் 109.0 ஆக அதிகரித்துள்ளது. இது 1.6 வீத வளர்ச்சியாகப் பதிவாகியுள்ளது.

2017 டிசம்பர் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்வனவுடன் ஒப்பிடுகையில் 2018ல் மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 27.7 வீதமாகவும் பானவகைகள் 14 வீதமாகவும், வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் 10.1 வீதமாகவும் அதிகரித்துள்ளன. இதற்கு மேலதிகமாக உணவு உற்பத்திக் கைத்தொழில் 0.2 வீதமாகப் பதிவாகியுள்ளது.

வாகன உற்பத்தி உள்ளிட்ட ஏனைய உற்பத்திகள் 32.3 வீதத்தாலும், புகையிலை பொருட்கள் 20.9 வீதத்தினாலும், இரசாயன உற்பத்திகள் 19 வீதத்தாலும் வீழ்ச்சிகண்டுள்ளன.

உற்பத்திக் கைத்தொழில்களில் 2017ஆம் ஆண்டு நான்காம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு நான்காம் காலாண்டு உற்பத்தி 0.9 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது.

ஆடை உற்பத்திகள் 4.7 வீதமாக அதிகரித்து 119.7 புள்ளியைப் பெற்றுள்ளது. அதேநேரம் ஏற்றுமதி 4.2 வீத வளர்ச்சியைக் கண்டு 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

